செய்தி வெளியீடு எண்:885 நாள்:14.10.2021

**செய்தி வெளியீடு**

சென்னை மண்டலம், காஞ்சிபுரம் வடக்கு மாவட்ட சரகத்திற்குட்பட்ட மதுபான சில்லறை விற்பனைக் கடை எண் 4109-ல் விற்பனையாளர்களாகப் பணிபுரிந்து வந்த திரு. எல்.துளசிதாஸ், திரு.எம்.இராமு ஆகியோர், கடந்த 4-10-2021 அன்றிரவு பணி முடிந்து, கடையை மூடிவிட்டு வந்தபோது, மர்ம நபர்கள் இவ்விருவரையும் தாக்கியதில், சம்பவ இடத்திலேயே திரு. எல்.துளசிதாஸ் மரணமடைந்த நிலையில், படுகாயங்களுடன் திரு. எம்.இராமு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகிறார் என்பதை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள், மேற்படிச் சம்பவத்தில் உயிரிழந்த திரு. எல்.துளசிதாஸ் அவர்களின் குடும்பத்திற்கு தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொண்டதுடன், இச்சம்பவத்திற்குக் காரணமான மர்ம நபர்களை துரிதமாகச் செயல்பட்டு கண்டுபிடிக்கவும் காவல் துறையினருக்கு உத்தரவிட்டுள்ளார். இதுபோன்று, டாஸ்மாக் சில்லறை விற்பனைக் கடைப் பணியாளர்கள் மீது தாக்குதல் நடத்தும் நபர்கள் மீது காவல் துறையினர் கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

மேலும், இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த திரு.எல்.துளசிதாஸ் அவர்கள் மாற்றுத் திறனாளி பணியாளர் என்பதை அறிந்த மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், திரு. எல். துளசிதாஸ் அவர்களது குடும்பத்திற்கு முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் வழங்கிடவும், அவரது குடும்பத்தினரின் ஏழ்மை நிலையைக் கருத்தில்கொண்டு, மறைந்த திரு.எல்.துளசிதாஸ் அவர்களின் மனைவி திருமதி சுமதி அவர்களின் கல்வித் தகுதிக்கேற்றவாறு, கருணை அடிப்படையில் உரிய பணியினை வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளார். மேலும் இச்சம்பவத்தில் படுகாயமுற்று மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவரும் திரு.எம்.இராமு அவர்களுக்கு உயர்தர சிகிச்சை அளிக்கவும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள்.

=====

வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9